**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**

முன்னிலை – **திருமதி பி. சுதா, பி.காம்., பி.எல்.,**

முதன்மை சார்பு நீதிபதி, மயிலாடுதுறை.

திருவள்ளுராண்டு 2056, விசுவாவ வருடம் பங்குனி மாதம் 12–ம் நாள்

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26–ஆம் நாள் வியாழக்கிழமை

**CNR.No.TNMY03-000211-2025**

**அசல் வழக்கு எண்.35/2025**

கனரா வங்கி, மயிலாடுதுறை அதன்
முதுநிலை மேலாளர் மூலமாக ...வாதி

/எதிர்/

1. V. அகிலன்,
2. V.சௌந்தரவள்ளி, ...பிரதிவாதிகள்

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்பட்டு வாதிக்காக வழக்கறிஞர் திரு.கே.அழகானந்தன், அவர்கள் ஆஜராகியும், 2ம் பிரதிவாதி இறந்துவிட்டார் அவரை நீக்கரவு செய்யப்பட்டும், 1ம் பிரதிவாதியை நீதிமன்றத்தில் அழைக்கும் போது ஆஜராகாததால் தோன்றா தரப்பினராக கருதப்பட்டும், 23.03.2026–ம் தேதி வாதி தரப்பு சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டு, இன்று (26.03.2026) இறுதி விசாரணைக்காக என் முன்பு வந்தபோது, வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டு, இதுநாள் வரையில் எனது பரிசீலனையில் வைத்து, இன்றைய தினம் இந்நீதிமன்றம் கீழக்கண்டவாறு வழங்கும்.

**தீர்ப்புரை**

வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் கல்விக்கடனாக பெற்ற தாவா தொகை ரூ.2,96,607/–யும், அதற்குரிய பின் வட்டியையும், செலவுத் தொகையும் கொடுக்க உத்தரவிட கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வாதி வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு:–**

1ம் பிரதிவாதி வாதி வங்கியில் கடந்த 03.09.2015–ம் அன்று தனது மகனின் மேல்படிப்பிற்காக கல்விக்கடன் விண்ணப்பித்து ரூ.1,60,000/– கடனாக பெற்றுள்ளார். பிரதிவாதிகள் மேற்படி கடனுக்கு அன்றைய தினமே கடன் தொகையை 11.40% வட்டியுடன் திருப்பி செலுத்துவதாக உறுதி கூறி கடன் விண்ணப்பம், கல்விக்கடன் ஒப்பந்தம், கடன் ஒப்புகை பத்திரம் ஆகியவை எழுதிக் கொடுத்துள்ளார்கள். மேலும் பிரதிவாதிகளிடம் பலமுறை கடனை திருப்பி செலுத்துமாறு கூறியும் பிரதிவாதிகள் கடன் தொகையை செலுத்த

முன்வரவில்லை.

அவ்வப்போது பிரதிவாதிகளின் கணக்கில் வழக்கமான வட்டி விகிதத்துடன் பிரதிவாதிகளிடமிருந்து செலுத்த வேண்டிய தொகையை வாதி கணக்கிடப்பட்டு 21.01.2025ஆம் தேதியிட்ட வங்கி கணக்கு பட்டியலின்படி மொத்தம் ரூ.2,96,607/- பாக்கியுள்ளது. ஆகையால் தாவா தொகையும் அதற்கு பின் வட்டியையும், செலவுத்தொகையையும் பிராதுபடி வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் வழங்கிட உத்தரவு பிறப்பிக்க வேண்டி வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. இவ்வழக்கின் 2ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் அவரை நீக்கரவு செய்யப்பட்டுள்ளார். மேலும் 1ம் பிரதிவாதிக்கு சம்மன் சார்வு செய்யப்படாத நிலையில் செய்திதாள்களில் விளம்பரம் செய்யப்பட்டும் 1ம் பிரதிவாதியை நீதிமன்றத்தில் அழைக்கும் போது ஆஜராகாததால் தோன்றாதரப்பினராக தீர்மானிக்கப்பட்டுள்ளார். வாதி தரப்பில் வாதி வங்கியின் கிளை மேலாளர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**4. இவ்வழக்கில் தீர்வு காண வேண்டிய பிரச்சனைகள்:-**

வாதி தாக்கல் செய்த தாவா செலவுத்தொகையுடன் அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**தீர்வு:-**

5. வாதி வங்கியின் முதுநிலை மேலாளர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் Authorization letter வா.சா,ஆ.1 ஆகவும், 03.09.2015 தேதியிட்ட வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த கடன் விண்ணப்பம் வா.சா.ஆ.2 ஆகவும், 29.09.2015 தேதியிட்டு 2ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த Education Loan Agreement வா.சா.ஆ.3 ஆகவும், 31.12.2020 தேதியிட்டு 1. 2 பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த Letter of Acknowledgement of Debt வா.சா.ஆ.4 ஆகவும், 15.12.2022 தேதியிட்டு 1. 2 பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த Letter of Acknowledgement of Debt கடிதம் வா.சா.ஆ.5 ஆகவும், 21.01.2025 தேதியிட்டு வாதி வங்கியில் தாக்கல் செய்த கணக்கு பேரேட்டு நகல் வா.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. வாதி வங்கியின் முதுநிலை மேலாளரான வா.சா.1, தாவா சங்கதிகளை அனுசரித்து சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி வாதி தரப்பு

சான்றாவணங்களின் அடிப்படையில் வாதி வங்கியில் பிரதிவாதிகள் ரூ.1,60,000/- கடனை பெற்றுக்கொண்டு அதற்கு கடன் விண்ணப்பம், கல்விக்கடன் ஒப்பந்தம், கடன் ஒப்புகை பத்திரம் ஆகியவை எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்பது தெரியவருகிறது. எனவே வாதி வங்கியில் பிரதிவாதியின் கணக்குப்பட்டியல் வா.சா.ஆ.6ல் இருந்து பிரதிவாதிகள் வாங்கிய கடனின் அடிப்படையில் தாவா தொகை வாதிக்கு சேர வேண்டியுள்ளது என்பது தெரியவருவதால் பிரதிவாதிகள் தாவா கடன்படி தாவா தொகையை செலுத்த கடமைப்பட்டுள்ளார் என்பதை அறியமுடிகிறது.

7. இந்நிலையில் பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வாதுரை தாக்கல் செய்ய தவறிவிட்டதாலும், மறுதரப்பில்லா வாதியின் வழக்கு அவர் முன்னிலைப்படுத்திய வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களின் படி நிரூபிக்கப்பட்டுள்ளதால் வாதியின் வழக்கு கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படுகிறது. வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில், வாதி தாவாவில் கோரும், பரிகாரங்கள் பெற தகுதியானவர் என்று இப்பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**இறுதியாக.**

8. வாதி தாக்கல் செய்த தாவா செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு தாவா தொகையான ரூ.2,96,607/- மற்றும் அந்த கடனின் அசல் தொகையான ரூ.1,60,000/-த்திற்கு தாவா தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பு தேதிவரை 9 சதவீதம் வட்டியும், தீர்ப்புத்தேதியிலிருந்து தொகை செலுத்தும் வரை 6 சதவீத வட்டியும் சேர்த்து கணக்கிட்டு கொடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்தீர்ப்புரையானது என்னால் தட்டச்சரிடம் நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் படித்து சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று (26.03.2026) அவையறிய பகரப்பட்டது.

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.03.26 19:18:48 +0530

**முதன்மை சார்பு நீதிபதி,**
**மயிலாடுதுறை.**

**பின் இணைப்பு:-**

வாதி தரப்பு சாட்சி

வா.சா. 1. மதுசூதனராவ், (வாதி வங்கியின் முதுநிலை மேலாளர்)

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:–</u>

| வ.எண். | தேதி | ஆவண விபரம் | ஷரா |
|---|---|---|---|
| வா.சா.ஆ. 1 | –– | அதிகாரியால் வழங்கப்பட்ட Authorization Letter, | அசல் |
| வா.சா.ஆ. 2 | 03.09.2015 | பிரதிவாதிகளின் கடன் விண்ணப்பம் | அசல் |
| வா.சா.ஆ. 3 | 29.09.2015 | 2ம் பிரதிவாதி எழுதிக் கொடுத்த Educational Loan Agreement | அசல் |
| வா.சா.ஆ. 4 | 31.12.2020 | 1, 2 பிரதிவாதிகள் எழுதிக் கொடுத்த Letter of Acknowledgment of Debt. | அசல் |
| வா.சா.ஆ. 5 | 15.12.2022 | 1. 2 பிரதிவாதிகள்எழுதிக்கொடுத்த Letter of Acknowledgment of Debt கடிதம் | அசல் |
| வா.சா.ஆ. 6 | 21.01.2025 | பிரதிவாதியின் கணக்கு பட்டியிலின் கணினி நகல் | சான்றிட்ட நகல் |

SUDHA P

Digitally signed by SUDHA P
Date: 2026.03.26 19:18:55 +0530

**முதன்மை சார்பு நீதிபதி,**
**மயிலாடுதுறை.**

*முதன்மை சார்பு நீதிமன்றம்,*
*மயிலாடுதுறை.*
*நேரிய/வரைவு உத்தரவு*
*ஓ.எஸ்.35/2025*
*நாள்.26.03.2026*